## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 36/2022 | Date : 04.04.2024 | PW2 |
|---|---|---|
| Name: ராஜேந்திரன் | S/o.சுந்தரம் செட்டியார் | |
| Evidence Recorded Time: 1.00 P.M. to 1.30 P.M | | |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. முத்துசாமி என்பவர் அழைத்தன் பேரில் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் சரிதான். வழக்கில் வாதி என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்பது தெரியுமா என்றால் கல் மண்டபம் வாதிகளுக்கு சொந்தமானது என்று கேட்டு வழக்கு போட்டுள்ளார்கள். இந்து சமய அறநிலையத்துறை அதிகாரி , மாவட்ட ஆட்சியர் ஆகியோர்களை வழக்கில் சேர்த்துள்ளார். கல் மண்டபம் யாரால் கட்டப்பட்டது என்றால் தீர்த்தா செட்டியார் என்பவரால் கட்டப்பட்டது. கல் மண்டபர் எதற்காக கட்டப்பட்டது என்றால் சுப காரியங்கள் செய்வதற்காக ஆயிரம் வைசியர்களுக்காக கட்டப்பட்டது. கல் மண்டபம் பொது சொத்து என்ற சொன்னால் சரியல்ல. வாதிகளுக்கு மட்டும் தான் பாத்தியப்பட்ட சொத்தாகும். செவ்வாய்பேட்டையை சேர்ந்த தீர்த்த செட்டியாரை தெரியுமா என்றால் தெரியும். வாதிகளுக்கு அவர் பங்காளி ஆவார். மேற்படி தீர்த்த செட்டியாரும், ஆயிரம் வைசியர் சமூகத்தி சேர்ந்த ராமசாமி செட்டியாரும் தான் பங்குனி மற்றும் உற்சவத்தை நடத்தி வந்தார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தான் செய்து வருகிறார்கள். கல் மண்டபம் நங்கவள்ளி லட்சமி நரசிம்மர் ஆலயத்திற்கு சொந்தமானது என்றாலும் அது பொது சொத்து என்றாலும் சரியல்ல. வாதிகள் எனக்கு சொந்தமில்லை. எங்கள் சமூகத்தை சார்ந்தவர்கள். சின்னம்மாள் என்கிற பாப்பம்மாள் என்கிற அறக்கட்டடை நிர்வாகம் தான் கல் மண்டபத்தை பராமரித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. கட்டளைக்கு என்று நிலம் உள்ளது தெரியுமா என்றால் நிலம் கிடையாது. நிலம் உள்ளது என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த நிலத்தில் இருந்து வரும் வருவாயை கொண்டு தான் கோவில் நிர்வாகம் தான் செலவு செய்து வருகிறது என்றால் சரியல்ல. கல் மண்டபத்தில் ஊஞ்சல் உள்ளது என்றால் ஊஞ்சல் இல்லை. மணமக்கள் அமரக்கூடிய மணமேடை மட்டும் உள்ளது. உற்சவத்திற்கு வாதிகள் பணமோ, பொருளோ செய்கிறார்களா என்றால் அவர்கள்தான் கட்டளையை நடத்தி வருகிறார்கள். கல் மண்டபம் எப்போது கட்டப்பட்டது என்றால் கோவில் கட்டும் முன்பே கல் மண்டபம் கட்டி விட்டார்கள். கல் மண்டபத்தில் எத்தனை ஆண்டுகளாக மளிகை சாமான்களை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் உற்சவர் வரும் காலத்தை தவிர மற்ற நாட்களில் மளிகை

பொருட்களை வைப்பதும் எடுப்பதுமாக இருப்பார்கள். சேலத்தைசேர்ந்த ராமசாமி செட்டியார், சீனிவாச செட்டியார் ஆகியோர் முன்னால் அறங்காவலர்களாக இருந்தார்களா என்றால் அப்படி கியைாது. கல் மண்டபத்தின் சாவியை முத்துசாமிக்கு முன்பு யார் வைத்திருந்தார்கள் என்றால் வாதியின் தகப்பனார் வைத்திருந்து அதன் பின்னிட்டு வாதியின் வசம் உள்ளது. நான் சொல்வது தவறு என்றும் கல் மண்டபத்தின் பராமரிப்பு ஆயிரம் வைசியர் சமூகத்தை சேர்ந்த அருணாசல செட்டியார் மகன் நரசிம்ம செட்டியார் வசம் பல வருடங்களாக இருந்தது என்றால் சரியல்ல. வாதிகள் வசம் தான் உள்ளது. கல் மண்டபத்தின் உள்ளே நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். சாமி சிலைகள் செதுக்கி உள்ளார்களா என்றால் தூணில் மீன், ஸ்டார் போன்ற உருவங்கள் சிறியதாக செதுக்கப்பட்டுள்ளது. அதில் பல புராதான தூண்கள் உள்ளது என்றால் சரியல்ல. கல் மண்டபத்தை எத்தனை காலமாக ஆக்கிரமித்துள்ளார்கள் என்றால் ஆக்கிரமிப்பு கிடையாது. உற்சவர் காலம் தவிர மற்ற காலத்தில் மளிகை சாமான்கள் விற்பார்கள். கல் மண்டபத்திற்கு முன்பு உள்ள கடைகள் எப்போது கட்டப்பட்டது என்றால் எனக்கு விவரம் தெரிந்த காலத்திற்கு முன்பே கட்டப்பட்டது. கல் மண்டபத்தின் மேலே உஞ்சல் மாட்டுவதற்கு கொக்கி உள்ளதா என்றால் சாமி உற்சவர் வரும் போது ஊஞ்சலில் உற்சவரை வைப்பார்கள். நான் சொல்வது போல் அது மணமக்களுக்கான மணமேடை இல்லை என்றாலும் சாமியை வைக்க தான் அந்த ஊஞ்சல் வைக்கப்பட்டது என்று சொன்னாலும் சரியல்ல. கல் மண்டபத்தில் எத்தனை திருமணங்கள் நடைபெற்றது என்றால் என் அக்காவின் திருமணம் அங்கு தான் நடைபெற்றது. மண்டபத்தின் உள்ளே பூஜை சாமான் அறை உள்ளதா என்றால் மணமக்கள் அறைதான் இரண்டு தனித்தனியாக உள்ளது. கல் மண்டபத்திற்குள் விளக்கேற்றும் மாடம் உள்ளதா என்றால் இரண்டு மாடம் உள்ளது. நந்தவனம் தற்போது என்னவாக உள்ளது என்றால் தற்போதும் நந்தவனமாகத்தான் உள்ளது நிழலிற்காக தென்னை மரம் வைத்துள்ளார்கள். சுந்தரம் செட்டியாரை தெரியாது. லட்சுமண செட்டியார் நங்கவள்ளியில் பிறந்தவர். அவர் திருச்செங்கோட்டை சேர்ந்தவர் என்று சொன்னால் சரியல்ல. திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து அதில் போர்வெல் போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. வாதி தன் சொத்து என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளாரா அல்லது தன் சமூகத்தை சார்ந்தவர்கள் சொத்து என்று தாக்கல் செய்துள்ளாரா என்றால் வாதியின் சொத்து என்று தான் தாக்கல் செய்துள்ளார். சமூகத்திற்கும் அதற்கும் சம்மந்தம் கிடையாது. ச.எண்.310/12 ல் தான் வாதி புதிய கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. எத்தனை முறை உற்சவம் நடைபெறும் என்றால் வருடத்திற்கு 2 முறை நடைபெறும். ஒவ்வொரு உற்சவத்திற்கும் யார் செலவு செய்வார்கள் என்றால் வாதிகள் தான் செலவு செய்வார்கள். நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நரசிம்ம சுவாமி தேர்திருவிழாவில் கருட வாகன உற்சவ செலவு சேலத்தை சேர்ந்த பர்க்கீ கோபால் செட்டியார் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

வாதிகள் தான் செய்து வருகிறார்கள். கல் மண்டபம் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரியல்ல. கோவில் கட்டுவதற்கு முன்பே கல் மண்டபம் கட்டப்பட்டுவிட்டது. ஆவணத்தில் கோவில்நிலம் என்று கண்டுள்ளது என்றால் சரியல்ல. முத்துசாமி என் சமுகத்தை சார்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்ற சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–PW2

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எஸ்.முத்துராமன்
சார்பு நீதிபதி, மேட்டுர்.